المكتب التعاوني للدعوة والإرشاد وتوعية الجاليات بالجبيل

JUBAIL DA'WA & GUIDANCE CENTER

مسابقة علمية بمناسبة اليوم المفتوح للجالية التاميلية في التاريخ ٢٩/١٢/ ١٤٢٧هـ


# 2007 ஜனவரி 19 வெள்ளியன்று

# ஒரு நாள் இஸ்லாமிய மாநாடு.

## அல் ஜுபைல் மாநகரிலே...
## இஸ்லாமிய வழிகாட்டல் நிலைய,
## மஸ்ஜிதின் வளாகத்திலே..

**போட்டிக்கான வினாப்பத்திரம்.**


For Distribution

Jubail Da'wa & Guidance Center


போட்டியின் விதிகள் .

1- ஒருவர் ஒரு பத்திரத்திற்கு மாத்திரமே விடையளிக்க முடியும்.

2- குறிப்பிடப்பட்ட புத்தகங்களைத் தழுவி அளிக்கப்படும் விடைகளே பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

3- வினாப்பத்திரங்கள் பூர்த்தி செய்யப்பட்டு 10 ஜனவரி 2007 க்கு முன்பாக தபால் உறையிலிட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

4- விடைகள் தெளிவானவையாக, சுயமாக, உரிய வட்டத்தில் அளிக்கப்படவேண்டும்.

5- நடுவர்களின் தீர்ப்பே இறுதி முடிவாகக் கொள்ளப்படும்.

போட்டியாளரின் பெயர் :..........................................

இகாமா இலக்கம் :..........................................

தொழிலக/ வதிவிட முகவரி :..........................................

தொலை பேசி /மொபைல் :..........................................

அல்லாஹ்வின் பெயரால் ஆரம்பம் செய்கின்றேன் .

பின்வரும் குர்ஆன் வசனங்கள் இடம்பெறும் உரிய ஸூராக்களின் பெயர்களை அல்குர்ஆன் தமிழ் மொழிபெயர்ப்பிலிருந்து கண்டுபிடித்து அடையாளமிடுங்கள் .

1- முஹம்மத் (ஸல்) அல்லாஹ்வின் தூதர், அவரோடுள்ளோர் காபிர்களின் எதிரிகள் மு..மின்களின் அன்பர்கள் . அவர்கள் முகத்தில் ஸுஜூதின் அடையாளமிருக்கும் .

○ ஸூரா முஹம்மத். ○ ஸூரா பத்ஹு ○ ஸூரா ஸஜ்தா

2 விசுவாசிகளே! தப்பெண்ணம் கொள்வதை விட்டுவிடுங்கள், பிறரின் குறையை துருவி ஆராயாதீர், ஒருவரையொருவர் புறம் பேசாதீர்கள், உம் சகோதரனின் செத்த மாமிசத்தை நீர் உண்பீரா?.

○ஸூரா தாஹா. ○ ஸூரா முனாபிகூன். ○ ஸூரா அல் ஹுஜுராத்.

3- அல்லாஹ்வை அஞ்சுவோருக்கு அவன் விடிவை ஏற்படுத்துவான், அவர் எண்ணியிராத விதத்தில் அவருக்கு வழங்குவான் , அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்தோருக்கு அவனே போதும்.

○ ஸூரா தலாக். ○ ஸூரா தஹ்ரீம். ○ ஸூரா அல் ஜுமுஆ.

4-நீங்கள் குடிக்கும் நீரைப் பார்த்தீரா ? அதை மேகத்திலிருந்து இறக்கியது நீங்களா நாமா? நாம் நாடினால் அதை உப்புநீராக்கி விடுவோம். நீங்கள் நன்றி செலுத்த வேண்டாமா ?

○ ஸூரா அல் பத்ஹு ○ ஸூரா அல் வாகிஆ . ○ ஸூரா அல் மும்தஹினா .

5 -பயபக்தியுள்ளவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட சுவனத்தில் தெளிந்த நீர் ஆறுகளும், பாலாறுகளும் மது ஆறுகளும் , தேனாறுகளும் உள்ளன ,மேலும் பல்வகை கனிவர்க்கங்களும் உள்ளன .

○ ஸூரா அல் பாதிர் ○ஸூரா அல்கலம் . ○ ஸூரா அல் முஹம்மது .

6-யார் ( தன் அமல்கள் மூலம் ) மறுமையின் விளைச்சலை விரும்புகிறாரோ அவரது விளைச்சலை - அதிகரிப்போம். யார் உலக லாபத்தை நாடுகின்றாரோ அவருக்கு அதை அளிப்போம். ஆனால் மறுமையில் அவருக்கு எவ்வித பங்குமில்லை .

○ ஸூரா அல் ஷூரா . ○ ஸூரா அத்தலாக் . ○ ஸூரா அர் ரஹ்மான் .

7- அறிந்திடுவீர்! இவ்வுலக வாழ்வானதுவிளையாட்டும், வேடிக்கையும், அலங்காரமும், செல்வத்தையும் பிள்ளைகளையும் குவிப்பதே தான் . மழையால் முளைத்த பயிர் விவசாயியை ஆச்சரியப்படுத்தி விட்டு பின் காய்ந்து மஞ்சளித்து சருகாகிப் போகின்றது , இப்படித்தான் உலக வாழ்க்கையும்.

○ஸூரா அல்ஹதீத் . ○ ஸூரா அல்கமர் . ○ ஸூரா அல் காபிரூன்.

8- விசுவாசிகளே! வெள்ளியன்று தொழுகைக்காக அழைக்கப்பட்டால் அல்லாஹ்வை நினைவு கூர விரைந்திடுங்கள் . வியாபாரத்தை விட்டுவிடுவீர் ! உங்களுக்கு அறிவிருந்தால் இதுவே நல்லது.

○ ஸூரா அத் தவ்பா ○ ஸூரா அல் பகரா ○ ஸூரா அல் ஜுமுஆ

9- உங்களுக்கு மரணம் வருமுன் நாம் கொடுத்ததிலிருந்து தர்மம் செய்யுங்கள் .அவ்வாறு செய்யாதோர் மரணத்தறுவாயில் றப்பே! என்னைக் கொஞ்சம்பிற்படுத்து,நான் தருமமும் நல்லமலும் செய்து நல்லவனாவேன் என்பான்.அல்லாஹ் எந்தஉயிரையும் அதன்தவணைவந்தால் பிற்படுத்தமாட்டான் .

○ ஸூரா அல் கமர். ○ ஸூரா அல் முனாபிகூன் ○ ஸூரா அல் மு..மினூன்.

10-உயிர்களை அவை இறக்கும் போதும்,உறங்கும் போதும் அல்லாஹ்வே கைப்பற்றுகின்றான். பின் மரணத்தை விதித்த உயிர்களை தன்வசம் வைத்துக்கொண்டு ஏனையவற்றை குறிப்பிட்ட காலத்துக்கு (வாழ) அனுப்புகின்றான். சிந்திப்போருக்கு இதில் படிப்பினைகள் உள்ளன .

○ஸூரா அல் அல் மு..மின். ○ ஸூரா அல் ஜுமர். ○ ஸூரா அல் முஜாதலா .

11- ஒவ்வொருவரையும் நாம் அவரவர் செய்த பாவத்திற்காகவே தண்டித்தோம். சிலரை கல்மாரி மூலமும், சிலரை பேரிடிமுழக்கத்தாலும், சிலரை பூமிக்குள் அழுத்தி சுரிவாங்கியும், சிலரை (கடலில்) மூழ்கடித்தும் . அல்லாஹ் அவர்களுக்கு அநியாயம் செய்யவில்லை அவர்களே தமக்குத்தாமே அநியாயம் செய்து கொண்டார்கள் .

○ ஸூரா அல் அன்கபூத் ○ ஸூரா அல் பய்யினா . ○ ஸூரா அத் துகான் .

12- (நிராகரிப்போருக்கு நாம் அள்ளி வழங்குவது கண்டு) மற்றவர்களும் ஒரே காபிர் சமூகமாகிடு வார்கள் என்றில்லையெனில் அவர்களது வீட்டுக்கூரை, கதவு, கட்டில்களை வெள்ளியால் தங்க த்தால் ஆக்கியிருப்போம். ஆனால் இவை இவ்வுலக வாழ்வின் (அற்ப) சுகங்களேயன்றி வேறில்லை

○ ஸூரா அல் கமர் ○ஸூரா அல் ஜுக்ருப் ○ஸூரா அஷ் ஷூரா.

13- தம் செல்வத்தை அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்வோருக்கு உதாரணம் ஒரு வித்தைப் போன்றது. அது ஏழு கதிர்களை முளைப்பிக்கும். ஒவ்வொருகதிரிலும் 100 வித்துக்கள் உள்ளன அல்லாஹ் நாடியோருக்கு இதை இன்னும் இரு மடங்காக்குவான் .

○அல் பகரா 201 ○ அல் பகரா 151 ○ அல் பகரா 261

14- தலாக் சொல்லப்பட்ட பெண்களின் இத்தா காலம் அவர்கள் மாதவிடாய் நின்றுவிட்ட வயதான வர்களாயின், அல்லது மாதவிடாயே ஏற்படாதவர்களாயின் 3 மாதங்களாகும் . கர்ப்பமுற்றவர்க களுக்கு கர்ப்பத்தைப் பிரசவிக்கும் வரையாகும் .

○ ஸூரா அந் நூஹ் . ○ ஸூரா அல் பஜ்ர் . ○ ஸூரா அத் தலாக் .

15 – நல்லோர்கள் அல்லாஹ் மீதுள்ள அன்பின் காரணமாக ஏழைக்கும், அனாதைக்கும், சிறைவாசிக் கும் உணவளிப்பார்கள். நாம் உணவளிப்பது அல்லாஹ்வின் முகத்துக்காகத்தான், உம்மிடம் இருந்து எவ்வித நன்றியையோ பிரதிபலனையோ எதிர்பார்க்கவில்லை (என்றும் கூறுவார்கள்.)

○ ஸூரா அத் தஹ்ர் . ○ஸூரா அல் முல்க் . ○ ஸூரா அல் முஸம்மில் .

**பின்வரும் நபிமொழிகளின் அறிவிப்பாளரையும் இடம்பெறும் மூல நூலையும் 'றியாளுஸ் ஸாலிஹீன்' தமிழாக்கத்தின் 2 ம் பாகத்திலிருந்து அறிந்து சரியானதைச் சுட்டிக்காட்டுக .**

16- மனிதன் மரணித்தால் மூன்று அமல்களைத்தவிர அனைத்தும் அவனைவிட்டு நின்றுவிடும். அவை ஸதகா ஜாரியா, பயனுள்ள கல்வி , அவருக்காக துஆசெய்யும் நல்ல பிள்ளை ஆகியனவாகும்.

○ ஜாபிர் (றழி) : புகாரி . ○ அனஸ் (றழி) : திர்மிதி . ○ அபூஹுரைரா (றழி) : முஸ்லிம்.

17-கொட்டாவி ஷைத்தானிடமிருந்துள்ளதாகும். உமக்கு கொட்டாவி வந்தால் முடிந்தளவு அடக்கிக் கொள்ளவும் . ஏனெனில் கொட்டாவி விட்டால் ஷைத்தான் அவனைப் பார்த்துச் சிரிக்கின்றான் .

○ அபூபக்ர் (றழி) : அபூதாவூத் ○ அபூஹுரைரா (றழி) : புகாரி ○ அஸ்மா (றழி) : நஸாயி

18-ஜனாஸாவை விரைவாக அடக்கஞ்செய்யுங்கள் . அது நல்லவராயின் நன்மையின் பக்கம் முற்படு த்துகின்றீர்கள். தீயதாயின் உங்கள் பிடரிகளை விட்டு அதை இறக்கி வைத்து விடுகிறீர்கள்.

○ அபூஹுரைரா (றழி) : புகாரி . ○ அபூ ஸயீத் (றழி) : ஹாகிம். ○அலி (றழி) : திர்மிதி .

19- யார் இஷாத் தொழுகையை ஜமாஅத்துடன் தொழுகின்றாரோ அவர் பாதிஇரவு நின்று வணங்கி யவரைப்போலாவார். பஜ்ரை ஜமாஅத்துடன் தொழுதவர் முழுஇரவும் நின்று வணங்கியவராவார்.

○உதுமான் (றழி) : திர்மிதி ○உதுமான் (றழி) : முஸ்லிம் ○ இப்னு உமர் (றழி) : பைஹகி.

20- முஅத்தின்கள் மறுமையில் (கண்ணியத்தால்) கழுத்து நீண்டவர்களாகக் காணப்படுவார்கள் .

○ ஸயீத் குத்ரி (றழி) : புகாரி ○ ஆயிஷா (றழி) : திர்மிதி ○ முஆவியா (றழி) : முஸ்லிம்.

21- நபியவர்கள் எனக்கு மாதத்தில் 3 நோட்கள் நோன்புநோற்றல், இரண்டு ரக்அத் ளுஹாத் தொழல் தூங்குமுன் வித்ர் தொழல் ஆகியவற்றை விடாமல் கடைப்பிடிக்குமாறு வஸிய்யத் செய்தார்கள்.
○ அபூதர (றழி) : அபூதாவுத் ○ அபூஹுரைரா (றழி) : புகாரிமுஸ்லிம் ○ இப்னுஅப்பாஸ்: புகாரி .

22- சூரியன் உதிக்கும் நாட்களிலேயே சிறந்தது வெள்ளிக்கிழமையே . அன்றுதான் ஆதம் (அலை) படைக்கப்பட்டார்கள், அன்றுதான் சுவனத்தில் நுழைவிக்கப்பட்டார்கள், அன்றுதான் சுவர்க்கத்தி லிருந்து வெளியேற்றவும் பட்டார்கள் .
○ இப்னு உமர் (றழி) : திர்மிதி ○ ஜாபிர் (றழி) : அஹ்மத் ○ அபூஹுரைரா (றழி) : முஸ்லிம்.

23- உங்களில் ஒருவர் தூங்கும் போது அவரின் பிடரியில் ஷைத்தான் 3முடிச்சுகள் போடுகின்றான் அவர் எழுந்து அல்லாஹ்வை புகழ்ந்தால் ஒரு முடிச்சு அவிழ்கிறது. உளூச் செய்தால் 2ம் முடிச்சும் அவிழ்ந்துவிடும் , பஜ்ர் தொழுதால் 3ம் முடிச்சும் அவிழ்ந்திடும்.
○ அபூஹுரைரா (றழி) : முஸ்லிம் ○ அம்ர் (றழி) : புகாரி ○ அனஸ் (றழி) : முஸ்லிம்

24- விற்கும்போதும் வாங்கும்போதும் கடனைத் திருப்பிக் கேட்கும் போதும் மென்மையைக் கடைப் பிடிக்கும் மனிதருக்கு அல்லாஹ் றஹ்மத் செய்வானாக என நபியவர்கள் பிரார்த்தித்தார்கள் .
○ அபூ கதாதா (றழி) : முஸ்லிம். ○ ஜாபிர் (றழி) : புகாரி . ○ அனஸ் (றழி) : இப்னுமாஜா.

25- யார் இறைவழியில் ஷஹாதத் எனும் வீர மரணத்தை வேண்டி துஆச்செய்கின்றாரோ, அல்லாஹ் அவர் படுக்கையில் மரணித்தாலும் அவருக்கு ஷுஹதாக்களின் அந்தஸ்த்தை வழங்குவான் .
○அனஸ் (றழி) : புகாரி . ○ ஜாபிர் (றழி) : புகாரி முஸ்லிம் . ○ ஸஹ்ல் (றழி) : முஸ்லிம் .

---

**உங்கள் கவனத்திற்கு...**

இப் பத்திரத்தில் உள்ள வினாக்களின் சில வாசகங்கள் இலகு நடை கருதி மூல நாலிலுள்ளதை விடவும் சற்றே திருத்தியமைக்கப்பட்டுள்ளன என்பதைக் கவனத்தில் கொள்க !

**இப் போட்டியில் பங்குபற்றி...**

-அல்குர்ஆனோடு உங்களைத் தொடர்பு படுத்திக் கொள்ள முடியும்
-நபிமொழி நூல்களோடு உங்கள் தொடர்பை அதிகரிக்க முடியும்.
-உங்கள் மார்க்க அறிவையும் ஈமானையும் அதிகரிக்க முடியும் ..
- அல்லாஹ்வின் அன்பையும் றஹ்மத்தையும் பெற முடியும். .
-பல்வேறு பெறுமதிமிக்க பரிசில்களை வென்றெடுக்கலாம் ...

AL JUBAIL DAWAH AND GUIDANCE CENTER
TAMIL DAWAH SECTION
P .O BOX 1580 - AL JUBAIL 31951
தொடர்புகளுக்கு :3625500 EXT 1015 ,1027, 1029 0502561645 – 0561486893 – 0568500214

19 ஜனவரி 2007 ஒருநாள் மாநாட்டுக்கு அனைவரையும் வருக! அறிவமுதம் பருக!!